


இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 331 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 27 – வெள்ளிக்கிழமை 11 ஜூலை 2025 – மதுரை 36 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 331: Thiruvalluvar Year - 2056 - Aani 27 - Friday 11 July 2025 - Madurai 36 Pages ₹ 5.00


## துரோகத்திற்குப் பெயர்போன பழனிசாமி - நம் மாநில உரிமைகளைப் பறிப்பவர்களோடு கூட்டணி!

# நாம் ஓரணியில் இணைந்து தமிழ்நாட்டை மேலும் உயர்த்துவோம்!

## திருவாரூர் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் - கழக அரசின் சாதனைகளைப் பட்டியலிட்டு எழுச்சியுரை!

**திருவாரூர், ஜூலை 11-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.7.2025) திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.7.2025) திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் 73 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் 1234 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 172 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 2423 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி. செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வை.செல்வராஜ், முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி.கே.கலைவாணன், கே.மாரிமுத்து, திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வ.மோகனச்சந்திரன், தாட்கோ தலைவர் இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆழித்தேர் ஓடும் ஆரூர் மண்ணின் வாசமும் – தலைவர் கலைஞர் வாழ்ந்த மண்ணின் பாசமும் வரவேற்கக்கூடிய வகையில், வேளாண்மையும் கலையும் செழித்து வளரும் திருவாரூர் மண்ணில், "ஆரூர் அமர்ந்த அரசே போற்றி" என்கின்ற பதிகத் திற்கேற்ப தமிழ்நாட்டை ஐந்து முறை ஆண்ட ஆரூர் காரர் முத்தமிழறிஞர் கலைஞரின் மகனாக மட்டுமின்றி, அவருடைய கொள்கை வாரிசான தமிழ்நாட்டின் முதலமைச்சராக இந்த விழாவில் நான் பங்கேற்கிறேன்.

846 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஆயிரத்து 234 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 2 ஆயிரத்து 423 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 67 ஆயிரத்து 181 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற இந்த மாபெரும் அரசு விழாவில் கலந்துகொண்டு, உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! பெருமைப்படுகிறேன்!

### திருவாரூர் என்றாலே தேரும் கலைஞரும்தான் நினைவுக்கு வருவார்கள்!

திருவாரூர் என்றாலே எல்லோருடைய மனதிலும் திருவாரூர் தேரும் தலைவர் கலைஞரும் தான் நினைவிற்கு வருவார்கள்! தோன்றுவார்கள்! தலைவர் கலைஞர் பிறந்த திருக்குவளை இன்றைக்கு நாகை மாவட்டத்தில் இருந்தாலும், ஒருகாலத்தில் எல்லாம் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம்தான்! இந்த மண்ணில் பிறந்த கலைஞர்தான், தன்னுடைய அறிவால் - ஆற்றலால் தொட்ட துறைகளில் எல்லாம் வெற்றி பெற்று தொலைநோக்குப் பார்வையால் நவீன தமிழ்நாட்டை தன்னுடைய நிர்வாகத் திறனால் உருவாக்கியிருக்கிறார்.

பூமிப்பந்தில் வாழும் தமிழர்கள் எல்லாம் 'தமிழினத் தலைவர்' என்று போற்றக்கூடிய அளவுக்கு உயர்ந்து, இன்றைக்கு எங்கும் நிறைந்து, நமக்கெல்லாம் வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்!

### என்னை "எங்களில் ஒருவன்" என அழைக்கும் திருவாரூர் மக்கள்!

நான் பிற மாவட்டங்களில் பேசும்போது, மக்களிடம் "உங்களில் ஒருவன்" என்று சொல்வதுண்டு; திருவாரூர் மாவட்ட மக்கள் மட்டும்தான் "எங்களில் ஒருவன்" என்று என்னை அன்போடு அரவணைக்கிறீர்கள். அதற்குக் காரணம், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர்!

பெருமையோடு நான் சொல்கிறேன் கலைஞர் ஆட்சியின் நீட்சிதான், இந்த திராவிட மாடல் ஆட்சி! பேரறிஞர் அண்ணா சொல்வார்: என்னுடைய தம்பிமார்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் திறமைசாலிகள்! என்று சொல்வார்! அப்படி, இன்றைய அமைச்சரவையில் இருக்கக் கூடிய தம்பிமார் படையில், தலைநிமிர்ந்து சொல்லுகின்ற திறமைசாலியாக, தம்பி டி.ஆர்.பி.ராஜா இருக்கிறார்! உயரத்தில் மட்டும் நான் சொல்லவில்லை.

அவரது சிறப்பான பணிகளால் தமிழ்நாட்டின் தொழில் துறை தலைநிமிர்ந்து நிற்கிறது! அவரைப் போலவே டி.ஆர்.பி.ராஜாவின் உழைப்பாலும், சாதனையாலும் ஏராளமான தொழிற்சாலைகள் தமிழ்நாட்டை நோக்கி வருகிறது! முதலீடுகளும் பெருகுகிறது; வேலைவாய்ப்புகளும் பெருகுகிறது! அனைத்து மாவட்டங்களும் தொழில் வளர்ச்சி நிறைந்த மாவட்டங்களாக வளர்ந்து வருகிறது! நிறைவாக சொல்ல வேண்டும் என்று சொன்னால், செய்தி, சேனல்களின் வளர்ச்சியை டி.ஆர்.பி ரேட்டை வைத்துக் குறிப்பிட்டுச் சொல்வார்கள். அதுபோல, நம்முடைய திராவிட மாடல் அரசின் தொழில்துறை வளர்ச்சியை நம்முடைய டி.ஆர்.பி. ராஜாவின் செயல்பாட்டை வைத்துக் கணிக்கலாம். தன்னை வெற்றிகரமாக நிரூபித்துக் கொண்டிருக்கக்கூடிய தம்பி டி.ஆர்.பி.ராஜாவுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்! பாராட்டுக்கள்!

### எந்தப் பொறுப்பு வழங்கினாலும், சிறப்பாகப் பணியாற்றும் பூண்டி கலைவாணன்!

அவர் மட்டுமல்ல, இந்த மாவட்டத்தின் செயல்வீரராக நம்முடைய பூண்டி கலைவாணன் அவர்கள் நேற்றும், இன்றும் திருவாரூரை திருவிழாவாக்கி என்னுடைய மனதை இனிக்க வைத்திருக்கிறார். தலைவர் கலைஞருக்கு செல்லப் பிள்ளையாக அவர் மறைந்த பின்பு திருவாரூர் சட்டமன்ற தொகுதியில் சிறப்பாக செயல்பட்டு, எந்தப் பொறுப்பை வழங்கினாலும், பொறுப்பாக, சிறப்பாக பணியை முடிப்பவர் சகோதரர் கலைவாணன் அவர்கள். அவருக்கும் என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய திருவாரூர் மாவட்ட ஆட்சியர் மோகனச்சந்திரன் அவர்களுக்கும், அவருக்கு துணை நின்ற அரசு அலுவலர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள்! பாராட்டுக்கள்!

### திருவாரூருக்கு தலைவர் கலைஞர் செய்த சாதனைகள்!

திருவாரூரை பொறுத்தவரைக்கும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 22 ஆண்டுகள் ஓடாத ஆழித்தேரை நவீன தொழில்நுட்பத்தில் பக்தர்கள் பரவசம் அடையக்கூடிய வகையில், ஓட்டிக்காட்டியவர். திருவாரூர் மாவட்டத்தை தலைநகரமாக ஆக்கியவர்! ஆட்சியர் அலுவலகம், நீதிமன்ற வளாகம், திருவாரூர் நகராட்சிக்குப் புதிய கட்டடம், மாவட்ட காவல் அலுவலகம், புதிய பேருந்து நிலையத்திற்கு 2010 இல் அடிக்கல் நாட்டு விழா என அனைத்தும் கலைஞர் அவர்களால் உருவானது.

1970இல் திருவாரூரில் திரு.வி.க. அரசுக் கல்லூரி கொண்டு வந்தது தலைவர் கலைஞர் தான் என்பது எல்லோருக்கும் தெரியும். 2009இல் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத்தையும் கொண்டு வந்தார். அதுமட்டுமல்ல, 2010இல் மருத்துவக்கல்லூரி, மன்னார்குடியில் அரசு கலைக் கல்லூரி, பாமணி உரத் தொழிற்சாலை, உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த அண்ணன் கோ.சி.மணி அவர்கள் மாவட்டம் முழுவதும் குடிநீர் வசதிகளை உருவாக்கித் தந்தார். டி.ஆர்.பாலு அவர்களுடைய முயற்சியால் ஐந்து புதிய இரயில்கள் விடப்பட்டது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### தம்பி டி.ஆர்.பி.ராஜாவின் உழைப்பும் - சாதனையும்!



**தம்பி டி.ஆர்.பி.ராஜாவின் சிறப்பான பணிகளால் தமிழ்நாட்டின் தொழில் துறை தலைநிமிர்ந்து நிற்கிறது! அவரைப் போலவே டி.ஆர்.பி.ராஜாவின் உழைப்பாலும், சாதனையாலும் ஏராளமான தொழிற்சாலைகள் தமிழ்நாட்டை நோக்கி வருகிறது! முதலீடுகளும் பெருகுகிறது; வேலைவாய்ப்புகளும் பெருகுகிறது! அனைத்து மாவட்டங்களும் தொழில் வளர்ச்சி நிறைந்த மாவட்டங்களாக வளர்ந்து வருகிறது! நிறைவாக சொல்ல வேண்டும் என்று சொன்னால், செய்தி, சேனல்களின் வளர்ச்சியை டி.ஆர்.பி ரேட்டை வைத்துக் குறிப்பிட்டுச் சொல்வார்கள். அதுபோல, நம்முடைய திராவிட மாடல் அரசின் தொழில்துறை வளர்ச்சியை நம்முடைய டி.ஆர்.பி. ராஜாவின் செயல்பாட்டை வைத்துக் கணிக்கலாம். தன்னை வெற்றிகரமாக நிரூபித்துக் கொண்டிருக்கக்கூடிய தம்பி டி.ஆர்.பி.ராஜாவுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்! பாராட்டுக்கள்!**


சுதந்திரப் போராட்ட வீரர்

மாவீரன் அழகுமுத்துக்கோன்

அவர்களின்

பிறந்த நாள்



தமிழ்நாடு அரசின் சார்பில்
சுதந்திரப் போராட்ட வீரர்
மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

"பீரங்கி நெஞ்சைப் பிளந்தாலும் மன்னிப்பு கேட்க மாட்டேன், ஆங்கிலேயர்களுக்கு வரி கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை" எனச் சீறிய வீரன் அழகுமுத்துக்கோனின் வீரம், அணையா நெருப்பாய்த் தமிழர்தம் நெஞ்சங்களில் என்றும் சுடர்விட்டுக் கொண்டேதான் இருக்கும் !

- மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் பங்கேற்கிறார்கள்.

நாள் : 11.7.2025, வெள்ளிக்கிழமை,
நேரம்: காலை 10.00 மணி
இடம் : எழும்பூர் இரயில் நிலையம் அருகில், சென்னை

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in